வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனி - 2022

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் பாதகமாக உள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான (SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனியின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

	குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கம்பனியினால் “இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களை வாடிக்கையாளருக்குச் சமர்ப்பிக்கும்போது வருமானத்தை இனங்காணும் கொள்கை” 2021 ஆம் ஆண்டில் மாற்றி,	2021 இல் வருமானம் இனங்காணல் கொள்கை மாற்றப்பட்டிருந்த போதிலும், பின்னோக்கியதாகக் கணக்கிடத் தேவையான பணியாளர்கள் தற்போது நிறுவனத்தில் இல்லை.	குறித்த நியமத்தின் பிரகாரம், கணக்கீட்டுக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் நிதிக் கூற்றுக்களில் பின்னோக்கியதாகச் சீராக்கப்படல்

	''இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் வாடிக்கையாளரால் சான்றளிக்கப்படும் அடிப்படையில் வருமானத்தை இனங்காணுவதற்கு'' தீர்மானித்த போதிலும், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் (SLFRS for SMEs) 10.11.(இ) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்னோக்கியதாகக் கணக்கிடப்படவில்லை.		வேண்டும்.
(ஆ)	சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் (SLFRS for SMEs) 20.9 ஆம் பிரிவின் பிரகாரம் - குத்தகை ''குத்தகை காலத்தின் ஆரம்பத்தில், குத்தகைதாரர் சொத்தின் நேறிய பெறுமதி அல்லது குத்தகை கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதி ஆகிய இரண்டில் எது குறைவானதோ அந்தத் தொகையை நிதிநிலை அறிக்கையில் குத்தகை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகை கடப்பாடு இனங்காணப்படல் வேண்டும்". எவ்வாறாயினும், கம்பனியானது ரூ.101,426,609 பெறுமதியான குத்தகைச் சொத்துக்களில், ரூ.55,989,730 பெறுமதியான குத்தகைச் சொத்துக்களை மாத்திரமே கணக்கில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக, குத்தகைச் சொத்துக்களின் பெறுமதி ரூ.45,436,879 குறைவாக அறிக்கையிடப்பட்டிருந்தது.	மோட்டார் வாகனங்களுக்கான குத்தகை பெறுமதிகள் சொத்துக்களின் செலவில் தவறாகச் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்த நியமத்தின் பிரகாரம், குத்தகைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.
(இ)	சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் (SLFRS for SMEs) 2.12 ஆம் பிரிவின் பிரகாரம், தீர்மானங்கள் எடுக்கப்படும் கால எல்லைக்குரிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 100,000 கி.மீ. வீதி செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் வரையில் செலுத்த வேண்டியிருந்த ரூ. 11,600,000,000	2022 ஆம் ஆண்டில் திறைசேரிப் பிணைகளின் பெறுமதி தவறான முறையில் கணக்கிடப்பட்டுள்ளதால், 2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது அதைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரமே நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படல் வேண்டும்.

	நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ரூ. 11,600,000,000 பெறுமதியான திறைசேரிப் பிணையங்கள், கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் கீழ் காட்டப்பட்டிருந்தமையினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் மிகைப்படுத்திக் காட்டப்பட்டிருந்தன.		
(ஈ)	சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் (SLFRS for SMEs) 2.52 ஆம் பிரிவுக்கு முரணாக, மீளாய்வாண்டின் இறுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து நிர்மாண செயற்திட்டங்கள், நிறுத்தி வைத்தல்கள், இயந்திர உபகரண வாடகைகள், வேதனம் மற்றும் பாதுகாப்புச் செலவுகள் போன்றவற்றுக்காகப் பெறப்பட வேண்டிய ரூ. 19,108,468,445 தொகையில், முற்பணங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் மற்றும் வாடகைச் செலவுகளுக்காக கம்பனியினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூ. 4,623,482,510 ஐ ஈடுசெய்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட வேண்டிய நிலுவையாக ரூ. 14,484,985,935 நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே, கம்பனியின் வர்த்தக மற்றும் பெறப்பட வேண்டிய ரூ. 21,876,240,780 மீதியுடன் மொத்தமாக ரூ. 3,321,652,345 செலவு மீதிகள் ஈடுசெய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தன.	வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் திரட்டப்பட்ட தொகைகளாகக் காட்டுவது நிதி கொள்கையின் பிரகாரம் மிகவும் பொருத்தமானது.	குறித்த நியமத்தின் பிரகாரம், வெளித் தரப்பினருடன் நிலவுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றை நிதிக் கூற்றுக்களில் ஈடுசெய்யக் கூடாது.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான ரூ. 17,879,490,399 பெறுமதியான செயற்திட்ட வருமானத்துடன் தொடர்புடைய துணை ஒப்பந்தக் கோவைகள் மாதிரியைப் பரிசீலனை செய்தபோது, பிட்டவன லக வெவ்சிறிபுர பிரதான சந்தி வரையிலான வீதி அபிவிருத்திகளுக்காக 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூ. 12,284,100 பெறுமதியான இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களின் (IPC) பெறுமதி மற்றும் ஆயுர்வேத வீதியின் முதற் பகுதியின் அபிவிருத்திகளுக்காக ரூ. 36,000,000 தொகை ஆக ரூ. 48,284,100 வருமானமாக இனங்காணப்படாததன் காரணமாக, மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த வருமானம் அந்தத் தொகையால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன், கடந்த ஆண்டிற்குரிய ரூ. 89,784,983 பெறுமதியான 3 இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களுக்கான வருமானங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தமை மற்றும் கம்பனியினால் 2022 ஆம் ஆண்டில் ஏழு நாள் அழைப்பு வைப்புத் தொகையுடன் தொடர்புடைய வட்டி வருமானம் ரூ. 2,264,727 இனால் அதிகமாக இனங்காணப்பட்டிருந்தமை காரணமாக, மீளாய்வாண்டின் நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த வருமானம் ரூ. 92,049,710 இனால் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட அறிக்கையைத் தயாரிக்கும்போது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களில் உள்ள புள்ளிவிவரங்களின் துல்லியத்தன்மையை நிதிக் கூற்றுக்கள் தொகுப்பு சான்றுறுதிப்படுத்தப்பட முன்னர் உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் வருமானங்களின் பெறுமதியைச் சீர்செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் கம்பனியின் நிதிக் கூற்றுக்களினுள் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 15,529,142,117 ஆன செயற்திட்ட துணை ஒப்பந்த செலவில் மூன்று இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களுக்குரிய (IPCs) ரூபா 144,969,671 ஆன செலவு மற்றும் 4 பணிக் கட்டளைகளுக்குரிய ரூபா 82,577,480 கிரயம் உள்ளடக்கப்படாமையின் காரணத்தினால் செயற்திட்ட துணை ஒப்பந்தங்கள் செலவுகள் ரூபா 227,547,151 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட அறிக்கையைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களில் உள்ள புள்ளிவிவரங்களின் துல்லியத்தன்மையை நிதிக் கூற்றுக்கள் தொகுப்பு சான்றுறுதிப்படுத்தப்பட முன்னர் உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் துணை ஒப்பந்த செலவை சீர்செய்வதற்கு

			உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2 வேலை கட்டளைகளுக்குரிய இற்குரிய ரூ. 32,214,059 பெறுமதியான செயற்பாட்டுச் செலவு, செலவு அட்டவணைகளில் அதிகமாகச் உள்ளடக்கப்பட்டிருந்தமையின் காரணமாக, ஆண்டின் செயற்பாட்டுச் செலவு அந்தத் தொகையால் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	முகாமைத்துவத்தினால் கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை	நிதிக் கூற்றுக்களில் உள்ள புள்ளிவிவரங்களின் துல்லியத்தன்மையை நிதிக் கூற்றுக்கள் தொகுப்பு சான்றுறுதிப்படுத்தப்பட முன்னர் உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் செயற்திட்ட செலவுகள் சீர்செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத குத்தகை பொறுப்புகள் சரியாக அடையாளம் காணப்படாததால், நடைமுறை குத்தகை பொறுப்புகள் ரூ.4,910,174 அதிகமாகவும், நடைமுறை அல்லாத குத்தகை பொறுப்புகள் ரூ.4,910,174 குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.	நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத குத்தகை பொறுப்புக்களை தவறாக இனங்காணுதல் 2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் சரியாக வகைப்படுத்தப்படல் வேண்டும்.
(உ)	‘‘ஏனைய பெறவேண்டியவைகள்’’ எனக் கணக்கிடப்பட்டிருந்த 5 வழங்குனர்களுக்கு 5 வருடங்களுக்கு முன்னர் ப்ரீமிக்ஸ் (premix hire) வாடகைக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூ. 49,584,230 பெறுமதியான முற்பணம் அறவிடப்படாமல் இருந்தபோதிலும், அதற்கான தேவையான ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவத்தினால் கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை	இந்த முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காத பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பெறப்பட வேண்டிய முற்பணங்களைத் அறவிடப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	2022 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதி ரூ.19,108,468,445 ஆக இருந்தபோதிலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய மீதியாக ரூ.7,656,288,401 காட்டப்பட்டிருந்தமையினால் மீதிகளுக்கிடையில் ரூ.11,452,180,044 ஆன வேறுபாடு காணப்பட்டது. அவ்வாறே, கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை ரூ.4,623,482,510 ஆக இருந்தபோதிலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதி ரூ.2,341,865,238 ஆகக் காட்டப்பட்டிருந்தமையினால் மீதிகளுக்கிடையில் ரூ.2,281,617,272 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. ஆயினும், உரிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கம்பனிக்கும் இடையிலான செலுத்தப்பட வேண்டிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு, அவை எதிர்கால அறிக்கைகளில் சரிசெய்யப்படும்.	நிதிக் கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்துவதற்கு முன்னர் மீதிகள் ஒப்பிடப்பட்டு உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டியதுடன் இந்த வேறுபாடுகள் கண்டறியப்பட்டு சரியாக சீராக்கப்படுதல் வேண்டும்.
(எ)	கம்பனியின் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மகநகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதிகள் கணக்கிடப்பட்டிராததுடன் அந்த கம்பனியின் கணக்குகளின்படி, மகநகும வீதி நிர்மாண இயந்திரங்கள் (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூ. 882,118 ஆக இருந்தது. அவ்வாறே, கம்பனியின் கணக்குகளின்படி, மகநகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதிகள் எதுவும் கணக்கிடப்பட்டிராததுடன் அந்த கம்பனியின் கணக்குகளின்படி, மகநகும வீதி நிர்மாண இயந்திரங்கள் (தனியார்) கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதி ரூ. 68,311,538 ஆக இருந்தது. இந்த மீதிகளுக்கிடையிலான வேறுபாடுகளைச் சரியாக இனங்கண்டு கணக்குகளில் தேவையான சீர்செய்தல்களை மேற்கொள்ள கம்பனி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மகநகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் கம்பனிக்கும் இந்த கம்பனிக்கும் இடையிலான பெறப்பட வேண்டிய மீதிகளின் வேறுபாடுகளைச் ஒப்பிட்டு வருகின்றதுடன் இது எதிர்கால அறிக்கைகளில் சீர்செய்யப்படும்.	நிதிக் கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்துவதற்கு முன்னர் மீதிகள் ஒப்பிடப்பட்டு உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டியதுடன் இந்த வேறுபாடுகள் கண்டறியப்பட்டு சரியாக சீராக்கப்படுதல் வேண்டும்.

(ஏ)	கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் மற்றும் பேரேட்டின்படி, மீளாய்வாண்டின் ஓய்வூதியக் பணிக்கொடை ஒதுக்கங்கள் ரூ. 21,720,486 ஆக இருந்தபோதிலும், குறிப்பு இலக்கம் 19 இன் கீழ் அந்தத் தொகை ரூ. 29,965,228 எனக் காட்டப்பட்டிருந்தது.	ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கம் பேரேட்டுடன் ஒப்பிட்டதன் பின்னர், எதிர்கால அறிக்கைகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களிலுள்ள உள்ள புள்ளிவிவரங்களை அவற்றின் குறிப்புக்களுடன் ஒப்பிட்டுத் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
(ஐ)	2022 ஆம் ஆண்டிற்கான பேரேட்டின் படி, குறித்த ஆண்டில் செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடையின் பெறுமதி ரூ.6,844,490 ஆக இருந்தபோதிலும், குறிப்பு இலக்கம் 19 இன் கீழ் அந்தத் தொகை ரூ.15,323,486 ஆகக் காட்டப்பட்டிருந்தது.	ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு பேரேட்டுடன் ஒப்பிட்டதன் பின்னர், எதிர்கால அறிக்கைகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களிலுள்ள உள்ள புள்ளிவிவரங்களை அவற்றின் குறிப்புக்களுடன் ஒப்பிட்டுத் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1.5.4 **கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
இந்த கம்பனி, மகநகும வீதி நிர்மாண இயந்திரங்கள் (தனியார்) கம்பனி, மகநகும இமல்ஷன் உற்பத்தி கம்பனி மற்றும் மகநகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ கம்பனி ஆகியவற்றையும் ஒன்றிணைத்து ஒரு தனி கம்பனியை உருவாக்கத 2023 மார்ச் 28 திகதிய 23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் கம்பனியின் கலைப்பதற்கான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	கம்பனி கலைக்கப்படல் மற்றும் தன்னார்வ/ கட்டாய ஓய்வுத் திட்டத்தின் கீழ் ஊழியர்களை வெளியேற்றி, செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.	அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய நடவடிக்கைகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்த பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.5 **கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

	விடயம்	தொகை ரூ. மில்லியன்	இல்லாத சான்று	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	181.3	நிலையான சொத்துக்கள் பதிவேடு	நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வின் போது அதில் தவறுகளும் குறைபாடுகளும் கண்டறியப்பட்டன. இது 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளுடன் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு இணங்க வேண்டியதுடன் கணக்காய்வுக்குத் தேவையான சான்றுகள் உரிய காலப்பகுதிகளுக்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இருப்பு	173.4	இருப்பு மெய்மையாய்வு அறிக்கை	2022 ஆம் ஆண்டில் இருப்புச் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்படாததால், சமர்ப்பிக்க முடியவில்லை. 2024 ஆம் ஆண்டு முதல் இருப்பு மெய்மையாய்வு சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.	-மேற்படி-
(இ)	ஒப்பந்த நடைமுறையிலுள்ள வேலைகள் (நடைமுறை சொத்துக்கள்)	415.8	விரிவான அட்டவணை	நிறுவனத்தைக் கலைத்தமை காரணமாக நிதிப் பிரிவில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களே உள்ளதால், கோரப்பட்ட பகுப்பாய்வுகளை வழங்க முடியவில்லை. எதிர்கால ஆண்டுகளில் இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	-மேற்படி-
(ஈ)	புதிய கட்டிடங்கள் மற்றும் பொறிகள் நிர்மாணித்தமைக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணம்	1.49	மூல ஆவணங்கள் மற்றும் விரிவான அட்டவணை	-மேற்படி-	-மேற்படி-

(உ)	வணிக கடன் பட்டோர்	4,084.6	மூல ஆவணங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள்	கணக்காய்வினால் கோரப்பட்டுள்ளவாறு வருடாந்த காலப் பகுப்பாய்வுகளை எமது கணக்கீட்டு முறைமையிலிருந்து பெற முடியாதுள்ளதுடன், அவற்றை மேற்கொள்வதற்கு அதிக காலம் எடுக்கும். நிறுவனத்தைக் கலைத்தமை காரணமாக நிதிப் பிரிவில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களே உள்ளதால், கோரப்பட்ட பகுப்பாய்வுகளை வழங்க முடியவில்லை. எதிர்கால ஆண்டுகளில் இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	-மேற்படி-
(ஊ)	பெற வேண்டிய நிறுத்தி வைத்தல்கள்	4,714	மீதி உறுதிப்படுத்தல்	-மேற்படி-	-மேற்படி-
(எ)	பெற வேண்டிய ப்ரிமிக்ஸ் (premix மற்றும் வாடகை	75.4	மீதி உறுதிப்படுத்தல்	-மேற்படி-	-மேற்படி-
(ஏ)	பெற வேண்டிய நிறுத்தி வைத்தல்கள் - வீதி அபிவிருத்தி அதிகாரர சபை அல்லாத	76	மீதி உறுதிப்படுத்தல்	-மேற்படி-	-மேற்படி-
(ஐ)	ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணம்	2,525.40	மூல ஆவணங்கள்	-மேற்படி-	-மேற்படி-
(ஒ)	வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணம்	42.9	மூல ஆவணங்கள்	-மேற்படி-	-மேற்படி-
(ஓ)	துணை	14,748.4	மூல	-மேற்படி-	-மேற்படி-

	ஒப்பந்தம் மற்றும் ஏனைய வணிக செலுத்த வேண்டியவைகள்		ஆவணங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள்		
(ஔ)	செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல்கள்	4,196.20	மீதி உறுதிப்படுத்தல்கள்	-மேற்படி-	-மேற்படி-
(க)	பெறப்பட்ட முற்பணம் - வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லாத	48.1	இரசீதுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கா)	செலுத்த வேண்டிய நிர்மாணத் துறை பிணை நிதியம் வரி	22.7	மூல ஆவணங்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கி)	செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் கட்டணங்கள்	11.4	மூல ஆவணங்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கீ)	செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி	587.4	மூல ஆவணங்கள்	நிறுவனத்தைக் கலைத்தமை காரணமாக நிதிப் பிரிவில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களே உள்ளதால், கோரப்பட்ட பகுப்பாய்வுகளை வழங்க முடியவில்லை. எதிர்கால ஆண்டுகளில் இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	-மேற்படி-
(கு)	ஏனைய செலுத்த வேண்டியவைகள்	6.7	விரிவான தகவல்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கூ)	செலுத்த வேண்டிய	(5.5)	மூல ஆவணங்கள்	நிறுவனத்தைக் கலைத்தமை காரணமாக	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்

	சம்பளங்கள்		மற்றும் விரிவான தகவல்கள்	நிதிப் பிரிவில் வரையறுக்கப்பட்ட ஊழியர்களே உள்ளதால், கோரப்பட்ட பகுப்பாய்வுகளை வழங்க முடியவில்லை. எதிர்கால ஆண்டுகளில் இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு இணங்க வேண்டியதுடன் கணக்காய்வுக்குத் தேவையான சான்றுகள் உரிய காலப்பகுதிகளுக்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(கெ)	செலுத்த வேண்டிய மிகை கட்டணங்கள்	47.7	மூல ஆவணங்கள்	-மேற்படி-	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு இணங்க வேண்டியதுடன் கணக்காய்வுக்குத் தேவையான சான்றுகள் உரிய காலப்பகுதிகளுக்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(கே)	செலுத்தப்படாத வேதனங்கள்	4.8	விரிவான தகவல்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கை)	மகநெகும நலன்புரி சங்கத்திற்கு செலுத்த வேண்டிய மீதி	8.8	மூல ஆவணங்கள் மற்றும் விரிவான தகவல்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கொ)	செலுத்த வேண்டிய தேசிய கட்டியெழுப்பல் வரி	(3.1)	மூல ஆவணங்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கோ)	ஐயக் கடனுக்கான ஒதுக்கங்கள்	152.4	மூல ஆவணங்கள்	-மேற்படி-	-மேற்படி-
(கௌ)	நேரடி ஒப்பந்த நடைமுறையிலுள்ள வேலைகள் (விற்பனை கிரயம்)	437.7	விரிவான அட்டவணைகள்	-மேற்படி-	-மேற்படி-
(ங)	5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட	2.6	மூல ஆவணங்கள் மற்றும்	-மேற்படி-	-மேற்படி-

	பழைமையான ஊழியர் கடன்		விரிவான தகவல்கள்		
(ஙா)	பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய நிச்சயமற்ற கணக்கு மீதிகள்	98.87	மூல ஆவணங்கள், விரிவான அட்டவகைள் மற்றும் கால பகுப்பாய்வு	-மேற்படி-	-மேற்படி-
(ஙி)	நிலையான வைப்பு மீதி	1,439.54	வைப்புச் சான்றிதழ் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள்	முகாமைத்துவத்தினால் கருத்து முனவைக்கப்படவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 07 மற்றும் 38(1)(ஆ) பிரிவுகளுக்கு இணங்க வேண்டியதுடன் கணக்காய்வுக்குத் தேவையான சான்றுகள் உரிய காலப்பகுதிகளுக்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஙீ)	சான்றுப்படுத்தாத துணை ஒப்பந்த பற்றுச் சீட்டுக்கள்	996	குறித்த பற்றுச் சீட்டுகள் மற்றும் மூல ஆவணங்கள்	முகாமைத்துவத்தினால் கருத்து முனவைக்கப்படவில்லை.	-மேற்படி-

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வர்த்தக மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறப்பட வேண்டிய நிலுவை ரூ.18,438,288,373 ஆக இருந்தபோதிலும், உரிய அட்டவணைகளின்படி அந்த நிலுவை ரூ.18,554,588,435 ஆக இருந்தமையினால், நிதிக் கூற்றுக்களுக்கும் அட்டவணைகளுக்கும் இடையில் ரூ.116,300,062 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	நிதிக் கூற்றுக்களின் படி தொடர்புடைய வர்த்தகப் பெறப்பட வேண்டிய நிலுவையைச் ஒப்பிட்ட பிறகு, அது எதிர்கால அறிக்கைகளில் சீர்செய்யப்படும்.	நிதிக் கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்தும் முன், அவற்றின் நிலுவைகள் தொடர்புடைய துணை ஆவணங்களுடன் ஒப்பிடப்பட வேண்டிதுடன் நிலுவைத் தொகைகளை உறுதிப்படுத்தியதன் மூலம் சரியான மாற்றங்கள் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் வர்த்தகச் செலுத்த வேண்டிய நிலுவை ரூ.14,748,401,504 ஆக இருந்தபோதிலும், சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைப்படி அந்த நிலுவை ரூ.14,434,045,855 ஆக இருந்ததால், நிதிக் கூற்றுக்களுக்கும் அட்டவணைக்கும் இடையே ரூ.314,355,649 வித்தியாசம் காணப்பட்டது.	நிதிக் கூற்றுக்களின் படி தொடர்புடைய வர்த்தக செலுத்த வேண்டிய நிலுவையைச் ஒப்பிட்ட பிறகு, அது எதிர்கால அறிக்கைகளில் சீர்செய்யப்படும்.	நிதிக் கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்தும் முன், அவற்றின் நிலுவைகள் தொடர்புடைய துணை ஆவணங்களுடன் ஒப்பிடப்பட வேண்டிதுடன் நிலுவைத் தொகைகளை உறுதிப்படுத்தியதன் மூலம் சரியான மாற்றங்கள் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

1.7 தொடர்புள்ள தரப்பினர்கள் மற்றும் தொடர்புள்ள தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் 33 ஆம் பிரிவின்படி, தொடர்புடைய தரப்பினரிடையே மேற்கொள்ளப்பட்ட பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. (i) கம்பனி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கிடையிலான விலை நிர்ணயக் கொள்கைகள் (ii) கம்பனி மற்றும் மகநகும மதியுரை கம்பனியிடையே இடம்பெற்ற முக்கியமான கொடுக்கல் வாங்கல்கள் (iii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் மேற்கொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தங்கள் (iv) முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள், முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரப்பினருக்கும் கம்பனியிடையே இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்	இது எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்த நியமத்தின் பிரகாரம், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள், அதாவது கொடுக்கல் வாங்கலின் பெறுமதி, தன்மை, காலப்பகுதி போன்றன நிதிக் கூற்றுக்களில் போதுமான அளவில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் நியமத்திற்கு இணங்காத வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரித்த மற்றும் அங்கீகரித்த தரப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 78 ஆம் பிரிவு	ஒவ்வொரு கம்பனியும், அதன் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நாளிலிருந்து 2 மாதங்களுக்குள்ளும், அத்தகைய பங்குகளின் உரிமை மாற்றம் செய்யப்பட்ட நாளிலிருந்து 2 மாதங்களுக்குள்ளும், அந்தப் பங்குச் சான்றிதழ்களைப் பூர்த்தி செய்து வழங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டியதுடன் இந்த கம்பனியின் முழுமையான உரிமை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்தபோதிலும், அதற்கான பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவத்தினால் கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனியின் முழுமையான உரிமையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக அரசாங்கத்திற்கு உரித்தாகும் வகையில் உரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 திகதிய பீஈடீ 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் 3.1 ஆம் பிரிவு	கம்பனியானது 2022 ஆம் ஆண்டில் 912 ஊழியர்களைப் பணியமர்த்தியுள்ளதுடன் இவர்களில் 24 பேர் உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர்களாவதுடன் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் ஊதியங்களுக்காக திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி சம்பளங்களும் வேதனங்களும் செலுத்தப்பட்டிருந்தன.	கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படாமையினால் பொது திறைச்சேரியின் அங்கீகாரமின்றி சம்பளம் செலுத்த முடியும்.	பதவியணியினை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடைமுறை மற்றும் சம்பளம் வழங்குவதற்குத் தேவையான அங்கீகாரத்தை பெற வேண்டிய போதிலும் சுற்றறிக்கைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்ட பொறுப்புவாய்ந்த தரப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 759,645,314 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 634,734,765 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 124,910,549 ஆன இலாபம் அவதானிக்கப்பட்டது. இந்த இலாபத்திற்கு விற்பனை கிரயம் ரூபா 3,769,063,039 இனால் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 190,487,261 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாகவிருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 17 சதவீத வீழ்ச்சி அவதானிக்கபட்டதுடன், அதற்கு ஏற்ப விற்பனை கிரயமும் 17 சதவீதம் குறைந்துள்ளது. அவ்வாறே மொத்த இலாபம் 0.33 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.
- மீளாய்வாண்டின் ஏனைய வருமானங்கள் முந்தைய ஆண்டின் ஏனைய வருமானங்களுடன் ஒப்பிடுகையில் 90 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.
- மீளாய்வாண்டின் நிதிச் செலவு முந்தைய ஆண்டின் நிதிச் செலவுடன் ஒப்பிடுகையில் 287 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. சுழற்சி கடன் வசதிகளுக்கான வட்டி அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் கம்பனியின் நடைமுறை சொத்துக்கள் விகிதம் முந்தைய ஆண்டின் நடைமுறை சொத்துக்கள் விகிதத்துடன் ஒப்பிடுகையில் 1.22 இலிருந்து 1.09 ஆகக் குறைந்துள்ளது, மேலும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.11 இலிருந்து 0.61 ஆகக் குறைந்துள்ளது.
- மீளாய்வாண்டின் மற்றும் முந்தைய ஆண்டின் மொத்த இலாப விகிதம் முறையே 5 சதவீதமாகவும் 4 சதவீதமாகவும் இருந்ததுடன், முந்தைய ஆண்டில் நிகர இலாப விகிதம் 2.86 ஆகவும், மீளாய்வாண்டில் அது 3.6 சதவீதமாகவும் இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ஒரு கம்பனியாக இயங்கி வந்த வீதி நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி தனியார் கம்பனி (RC & DC) முழுமையாக மூடப்படுவதற்கும், தனியார் பொது கம்பனியொன்றை நிறுவும் சாத்தியம் குறித்து வீதி அபிவிருத்தி அமைச்சு மற்றும் திறைசேரியினால் பரிசீலிக்கப்படுவதற்கும் 2004 சனவரி 21 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானம் இல. அமப/04/0053/104/004 இன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் கம்பனி ஒன்றிணைக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது.	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச வளங்களை உயர்ந்தபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) நிர்மாணக் கைத்தொழில் சங்கம் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் தேசிய சங்கத்துடன் பங்காண்மையை மேற்கொள்வதன் மூலம் கம்பனியை நிறுவுவதற்காக 2004 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 04/0848/004/013- I ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கு முன்னர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானம் இல. 795/2004 இன் பிரகாரம் 2004 யூன் 11 ஆம் திகதி கம்பனி ஒன்றிணைக்கப்பட்டிருந்தது.		கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(இ) கம்பனியின் பெரும்பான்மையான உரிமையானது திறைசேரிக்கு மாற்றப்படும் வகையிலும், மீதமுள்ள பகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கிடைக்கும் வகையிலும் கம்பனியின் சங்கப் பிரமாணங்களைத் திருத்துவதற்கு 2013 பெப்ரவரி 18 திகதிய 13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் பெறப்பட்டிருந்த போதிலும், அந்த அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கம்பனியின் சங்கப் பிரமாணங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை.		கம்பனியின் தனி உரிமை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருப்பதால், சங்கப் பிரமாணங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் திருத்தப்பட வேண்டும்.	-மேற்படி-
(ஈ) மகநகும வீதி நிர்மாண இயந்திரங்கள் கம்பனியினால் தனியார் நிறுவனமொன்றுக்கு வீதி நிர்மாணத் திட்டமொன்று தொடர்பான கொடுப்பனவிற்காக 2024 ஒக்தோபர் 28 ஆம் திகதி வழங்கிய ரூ.464,348.79 பெறுமதியான 089989 ஆம் இலக்க காசோலைக்காக, மக்கள் வங்கியின் கட்டுபெத்த கிளையில் பேணப்படும் நடைமுறை கணக்கிலிருந்து ரூ.21,846,432.10 ஐ 2024 நவம்பர் 04 ஆம் திகதி வங்கியினால் வரவு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரனை அறிக்கையின்படி, காசோலையின் பெறுமதியை மோசடியான முறையில் மாற்றி (அரச இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைக்கு உட்பட்டு) நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளதாகவும், கம்பனியின் சில உத்தியோகத்தர்கள் இந்த நிதி முறைகேட்டைச் செய்வதற்கு உடந்தையாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தைத் நிராகரிக்க முடியாதெனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறித்த நிதி மோசடி தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் இதுவரை		கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட காசோலை தொடர்பாக, தங்கல்லை பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவில் 2024.12.11 ஆம் திகதி கம்பனியின் நிதி உத்தியோகத்தரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக அனைத்து பிரதிவாதிகளிடமிருந்தும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதுடன் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் எமது கம்பனியிடமிருந்து பெறப்பட்டுள்ளன. தங்கல்லை பொலிஸாரின் விசாரணைக்கு இணையாக, கொழும்பு	நிதி மோசடி சம்பந்தமாகப் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் மீது விரைவாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்து சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கிணங்க, அந்த நட்டம் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடு வலுப்படுத்தப்படல் வேண்டும்.

ஆரம்பிக்கப்படவில்லை. மேலும், கம்பனிக்கு ஏற்பட்ட இந்த நட்டத்தை அறவிடப்படுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன், காசோலையில் கையொப்பமிட்ட பொது முகாமையாளர் மற்றும் தலைவர் ஆகியோர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.	

3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 328(1) ஆம் பிரிவின்படி, கலைக்கப்பட முன்மொழியப்பட்ட கம்பனியொன்றின் சொத்துக்களை கம்பனியின் விசேட தீர்மானத்திற்கேற்ப கலைப்பாளரினால் பங்குதாரர்களிடையே விநியோகிக்கவோ, மாற்றீடு செய்யவோ அல்லது விற்கவோ முடிந்த போதிலும், 2024 ஒக்தோபர் 03 ஆம் திகதி ரூ. 591,219,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனங்கள், பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள், 2023 மார்ச் மாதம் முதல் கம்பனியின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தமையினால், கணக்காய்வுத் திகதி வரையில் கம்பனி வளாகத்திலும் வேலைத்தளங்களிலும் குறை பயன்பாட்டுடன் வைக்கப்பட்டிருந்தன.	கம்பனியை கலைப்பதற்கான உத்தரவு கிடைத்த பிறகு, சேவை வழங்குநர்களின் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் காரணமாக சொத்துக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்க முடியாமல் இருந்தது. தற்போது சொத்துக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய சொத்துக்களைப் பகுப்பாய்வு செய்து, அந்தச் சொத்துக்களிலிருந்து அதிகபட்ச நன்மைகளைப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகை வழிகாட்டி கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீத செயல்திறன் பிணைப்பத்திரம் நிறுவனத்தினால் பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும், ரூ.125,730 மில்லியன் பெறுமதியான 1753 வேலை உத்தரவுகளில் 1608 இற்கு செயல்திறன் பிணைப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.	செயல்திறன் பிணைப்பத்திரங்களுக்குப் பதிலாக, பற்றுச்சீட்டுக்களின் பெறுமதியில் 5 சதவீதமானவை செயல்திறனுக்காகக் கழிக்கப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தை நிறைவு செய்தமைக்கான சான்றிதழ்	பெறுகை வழிகாட்டியின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் அதற்கு இணங்காதவாறு வேலை உத்தரவுகளை வழங்கிய

		கிடைத்த பிறகு அவை விடுவிக்கப்படும். இன்றுவரை சுமார் 80 செயல்திறன் பற்றுச்சீட்டுக்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.	உத்திரோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பெறுகை வழிகாட்டி கோவையின் 5.4.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவுப் பிணையொன்றினை சமர்ப்பிப்பதன் பேரில், ஒப்பந்தப் பணத்திலிருந்து அதிகபட்சமாக 20 சதவீதம் முற்பணமாகச் செலுத்த முடிந்த போதிலும், இதற்கு இணங்காமல், ஒட்டுமொத்த 1753 வேலை உத்தரவுகளில் 1678 வேலை உத்தரங்களுக்கு வங்கிக் கடன் பிணைப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.	முற்பணங்களுக்கான வங்கிக் பிணைகளைப் பெறுதல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. இருப்பினும், 500 சேவை வழங்குனர்களில் 40 பேரைத் தவிர மற்ற அனைவரும் வழங்கப்பட்ட முற்பணங்களைத் தீர்த்துள்ளனர்.	-மேற்படி-

3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 100,000 கிலோமீட்டர் வீதித் செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூ.193,518 மில்லியன் பெறுமதியான 2481 வேலை உத்தரவுகள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தன. இவற்றுள் ரூ.32,736 மில்லியன் பெறுமதியான 351 வேலை உத்தரவுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூ.29,130 மில்லியன் பெறுமதியான 306 வேலை உத்தரவுகளின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூ.5,920 மில்லியன் பெறுமதியான 71 வேலை உத்தரவுகளின் ஒப்பந்த வேலைகளை நேரடியாகச் செய்வதற்காக கம்பனி பொறுப்பேற்றிருந்ததுடன் இது மொத்த வேலை உத்தரவுகளில் சுமார் 03 சதவீதம் மட்டுமேயாகும். 2008 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்திற்கு முரணாக, மொத்த உத்தரவுப் பெறுமதியில் 97 சதவீதமான ரூ.125,730 மில்லியன் பெறுமதியான 1,753 வேலை உத்தரவுகள் துணை ஒப்பந்தங்களாக	வேலை உத்தரவுகளின் பெறுமதிகள் இணங்கப்பட்டுள்ளது.	வேலை உத்தரவுகளைப் பொறுப்பேற்கும்போது, அவற்றின் செயற்பாட்டுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து முன்கூட்டியே அறிந்திருக்க மற்றும் பணிகளின் பௌதீக முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே, மீளாய்வாண்டினுள் 3,575 கி.மீ. நீளமான 2,557 வீதிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டு இறுதியில் 1,420 கி.மீ. நீளமான 970 வீதிகள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன. அதாவது, எதிர்பார்க்கப்பட்ட நிர்மாணத் தூரத்தில் சுமார் 38 சதவீதம் மட்டுமேயாகும்.		
(ஆ)	வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது வீதி நிர்மாணத் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, அதற்கான செலவு மதிப்பீட்டுடன் 25 சதவீத இலாப வரம்பைச் சேர்த்து ஒப்பந்தப் பெறுமதியைத் தீர்மானித்து, ஒப்பந்தத்தை கம்பனிக்கு வழங்குகிறதுடன் கம்பனியின் மேற்கூறிய இலாப வரம்பில் 20 சதவீதத்தை துணை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கி, 5 சதவீத இலாப வரம்பை கம்பனி பெற்றுக்கொள்வதன் ஊடாக, மீளாய்வாண்டினுள் செயற்திட்ட நடவடிக்கைகளில் தலையிடாமல், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் சேவைகளை வழங்குபவர்களுக்கும் இடையில் இடைத்தரகராகச் செயற்பட்டு ரூ. 1,386 மில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளது.	இதில் பொதுச் செலவுகள் மற்றும் இலாப ஈவுகள் ஈடுசெய்யப்பட்டுள்ளன.	அரசாங்கத்திற்கு அதிகபட்ச நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் அரசாங்க நிதியானது வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்தப்பட வேண்டும்.
(இ)	கம்பனியானது 2020 ஆம் ஆண்டில் 100,000 கிலோமீட்டர் வீதி செயற்திட்டத்தின் வீதி நிர்மாண முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக மாகாண, மாவட்ட மற்றும் வலய ஒருங்கிணைப்பாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்பாளர்களுக்கு ரூ.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒருங்ணைப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்தமையுடன் தொடர்பான தகவல்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்பட்ட செயலாற்றல் தொடர்பான அறிக்கைகள் என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக, தகைமையான நபர்கள் முறையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்களா மற்றும் பணி முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ததன் பின்னர்	மாகாண, மாவட்ட மற்றும் வலய ஒருங்கிணைப்பாளர்கள் உரிய முறைமைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் நிறுவனத்திற்குக் கிடைத்துள்ளன. அந்த அறிக்கைகள் அப்போதைய அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரின் கடிதத்திற்கமைய வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.	கணக்காய்வுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களை உடனடியாக வழங்கப்பட வேண்டிய போதிலும் தகுதியான ஒருங்கிணைப்பாளர்க ளை முறையாக ஆட்சேர்ப்பு செய்யவும், பணி முன்னேற்றத்தைச் சரிபார்த்த பின்னர் மட்டுமே கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தனவா என்பதை கணக்காய்வினால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட கணினி மென்பொருளில் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன. (i) இந்த மென்பொருளானது இணையவழி கொடுப்பனவுகளை (online) மேற்கொண்ட போதிலும், இணையவழிப் பெறுகைகளை (online) மேற்கொள்ள முடியாமை. (ii) கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கைகளான வீதி நிர்மாணக் தொழில்களில் ஒப்பந்த நிருவாகம் மற்றும் பட்டியல்கள் தீர்ப்பனவுகள் போன்றவற்றுக்குப் பொருந்தக்கூடிய வகையில் போதுமான உள்ளடக்குதலுடன் இந்த மென்பொருள் தொகுதி வடிவமைக்கப்பட்டிராமை. (iii) அறிக்கையிடல் காலப்பகுதி பூட்டப்பட்டிருக்கும் போது, முறைமையின் நிருவாகியின் அனுமதியுடன் நாளேட்டு குறிப்புகள் உள்இடுகையிடும் திகதியையும் மாற்றுவதற்குரிய சாத்தியம் காணப்படுகின்றமை.	கணக்காய்வு அவதானிப்புடன் உடன்பட்டுள்ளது.	மென்பொருள் முறைமையில் காணப்படும் கட்டுப்பாட்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.